சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 17.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 38/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | ராஜகோபாலன் |
| தந்தை பெயர் | : | சண்முகம் |
| கிராமம் | : | சேந்தமங்கலம் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | உதவி ஆய்வாளர், பணி ஓய்வு |
| வயது | : | 62 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி இவ்வழக்கில் நீதிமன்ற காவலில் உள்ளார். மேலும் அவர் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2017 ஆம் வருடம் திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது 02.02.2017 ஆம் தேதி பணியிலிருந்தபோது காலை 10.00 மணியளவில் காட்டூர் கீழத்தெருவை சேர்ந்த மாணிக்கம் மகன் வடிவழகன் (எ) சத்தியமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.38/2017-ல் எதிர்பாராத தீ விபத்தில் -ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் காலை 11.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனியாண்டி மற்றும் அ.சா-6 ஜெயராமன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ-2 ஆன பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து உடனிருந்த சாட்சிகளிம் கையொப்பம் பெற்றேன். அந்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் அ.சா-1 சத்தியமூர்த்தி , அ.சா-4 ராஜ்குமார், அ.சா-5 வீரையன், அ.சா-7 மகேந்திரன் ஆகியோர்களை தனி தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து வழக்கின் மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் மேற்பார்வைக்காக வைத்தேன். மேற்படி விவரங்களை காவல் ஆய்வாளர் விசாரணை செய்ய விவரம் சொன்னேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

அ.சா-1 வடிவழகன் (எ) சத்தியமூர்த்தி என்பவர் திருவாரூர் வடக்கு மாவட்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் என்றால் சரிதான். அ.சா-1 திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்திற்கு அடிக்கடி வந்து செல்வது வழக்கம் தான் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 01.02.2017 ஆம் தேதி அ.சா.ஆ-5 ஆன முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது 02.02.2017 ம் தேதி என்று சொன்னால் சரிதான். நான் சொன்ன நேரத்தில், சொன்னவாரு அ.சா-1 புகார்

அளிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.17 17:07:19 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.